**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.1918/ஆ5/2023, நாள். 28.06.2023**
•••••

பொருள் பள்ளிக் கல்வி – 2022–2023ம் ஆண்டு மான்யக் கோரிக்கை அறிவிப்பு – மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு தமிழ் கையெழுத்துப் போட்டிகள் நடத்தப்பட்டது – போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் தெரிவித்தல் – சார்பு

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 208, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1,1) துறை நாள். 30.12.2022
2. சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் கடித ந.க.எண். 52447/எம்/இ1/2022, நாள். 03.05.2023 மற்றும் 19.05.2023

•••••

பார்வை 2–ல் காணும் கடிதத்திற்கிணங்க தமிழ் வளர்ச்சி துறையின் 2022–2023ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பில் பள்ளிகளில், பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியை அழகாக எழுதி வருபவர்களை ஊக்குவிக்கவும், இதனடிப்படையில் பிற மாணவர்களுக்கு தமிழில் அழகாக எழுதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் 6 முதல் 9–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் மற்றும் 10 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் என இரு குழுக்களாக தமிழ் கையெழுத்துப் போட்டியானது 28.06.2023 அன்று வேலூர், ஊரிஸ் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

தமிழ் கையெழுத்துப் போட்டில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வெற்றி பெற்ற மாணவர்கள் விவரத்தினை சம்மந்தப்பட்ட மாணவர்களுக்கு தெரிவிக்குமாறும், வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களால் வழங்கப்படும் என சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாணவர்கள் வெற்றி பெற்ற விவரம் அறியும் வண்ணம் அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர் –**
தலைமையாசிரியர்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

**நகல் –**
மாவட்ட தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி துறை, மாவட்ட ஆட்சியர் வளாகம்,
வேலூர் மாவட்டம்.

**தமிழ் கையெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் கீழ்கண்டவாறு**

| **தமிழ் கையெழுத்துப் போட்டி – 6 முதல் 9–ம் வகுப்பு வரை** | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **மாணவர் பெயர்** | **வகுப்பு** | **பள்ளியின் பெயர்** | **வெற்றி பெற்ற விவரம்** |
| 1. | பூ. ஹர்ஷினி | 9 | அரசு உயர்நிலைப் பள்ளி, பாலமதி | முதல் இடம் |
| 2. | பி. அபிநயா | 9 | அரசு உயர்நிலைப் பள்ளி, பல்லாலக்குப்பம், குடியாத்தம் | இரண்டாம் இடம் |
| 3. | ச. தாரணிஸ்ரீ | 9 | வி.கே.வி.எம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வேலப்பாடி | மூன்றாம் இடம் |

| **தமிழ் கையெழுத்துப் போட்டி – 10 முதல் 12–ம் வகுப்பு வரை** | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **மாணவர் பெயர்** | **வகுப்பு** | **பள்ளியின் பெயர்** | **வெற்றி பெற்ற விவரம்** |
| 1. | ஆ. பூர்ணிமா | 11 | அரசு மேல்நிலைப் பள்ளி, சேர்க்காடு | முதல் இடம் |
| 2. | மு. தர்ஷினி | 12 | திருவள்ளுவர் மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம் | இரண்டாம் இடம் |
| 3. | கே. மேகலா | 10 | அரசு உயர்நிலைப் பள்ளி, செம்பேடு | மூன்றாம் இடம் |